பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 09 வெள்ளிக்கிழமை (26.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 330

## உயிர் அச்சுறுத்தலால் சரணடைவோருக்கு இரு இடங்களில் புனர்வாழ்வு நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 26

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைபவர்களை தங்கவைப்பதற்கு இரண்டு இடங்களில் புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளன புனர்வாழ்வு நிலையத்தில் சரண் அடைந்த சகலரையும் தங்கவைக்க வசதி போதியதாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் வந்த பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுடன் யாழ். அரச அதிபர் கே.கணேஸ், யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோர் ஆராய்ந்தனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் கேந்திர நிலைகள் மீது தாக்குதல் நடத்தப் புலிகள் திட்டம்?

### 2 பெண்கள் உட்பட 6 கரும்புலிகள் ஊடுருவலாம்!

கொழும்பு, ஒக். 26

கொழும்பு நகரிலுள்ள பொருளாதாரக் கேந்திர நிலைகள் மீது தாக்குதல் நடத்தி அழிவையேற்படுத்தும் பொருட்டு விடுதலைப் புலிகளின் தற்கொலைதாரிகள் ஆறுபேர் கொண்ட குழுவொன்று ஊடுருவியிருப்பதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்திருக்கின்றனர்.

பாதுகாப்புத்துறை அதிகாரிகளின் கூட்டத்தில் இது தொடர்பாகப் பேசப்பட்டதோடு, இந்தக் குழுவைக் கண்டு பிடிப்பதற்கான திட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

# தமிழருக்காக குரல் எழுப்புவது இராஜ துரோக குற்றமாயின் விளைவுகளை ஏற்கத் தயார்!

## பிரதம நீதியரசருக்கு கூட்டமைப்புப் பதில்





கொழும்பு, ஒக்ரோபர் 26

தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பது இராஜ துரோகக் குற்றமாயின் அதற்கான விளைவுகளை ஏற்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயார்.

தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து மறுக்கப்பட்டு வரும் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையைக் கோருவது இராஜ துரோகம் என்றால் அதன் விளைவைச் சந்திக்க நாம் ஆயத்தமாக உள்ளோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகக் கட்டடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்துப் பேசுகையில் பிரதம நீதியரசர் தெரிவித்த கருத்துக்கு -

''இலங்கைக்கு உறுதியளிக்கப்பட்ட மொத்த வெளிநாட்டு உதவிகளில் 41 வீதமான பெரும் பங்கை ஜப்பான் வழங்குகின்றது. அடுத்த பெரிய பங்களிப்பு ஆசிய அபிவிருத்தி வங்கியால் செய்யப்படுகின்றது. அமெரிக்கா அடங்கிய மற்றைய மேற்கத்தைய நாடுகளின் பங்களிப்பு இதற்கும் குறைவானதாகும் -

எங்களை அடக்குவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் வரையறைகளை இடுவதற்கும், எங்கள் மக்களின் உரிமைகளை நாம் எப்படி மதிக்கவேண்டும் என்று கற்பிப்பதற்கும் அவர்கள் பிரம்புடன் வருவார்கள். எம்மில் சிலர் அவர்களிடம் போய் மண்டியிட்டு அந்தப் பிரம்பைப் பாவிக்குமாறும், எமது நாட்டின் மீது தடைகளை விதிக்குமாறும் இரந்து நிற்கிறார்கள். இது இராஜ துரோகம் அன்றி வேறொன்றுமில்லை என்று தெரிவித்த கருத்துக்கு பதில் தரும் விதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பதிலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த ஒன்றரை வருட காலத்தில் அரச படைகளினாலும் அரச ஆதரவு ஆயுதக் குழுக்களினாலும் எண்ணற்ற மனித உரிமை மீறல்கள் தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அரசியல் வாதிகள் பத்திரிகையாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், வேட்பாளர்கள், உயர் கல்வி மாணவர்கள் மட்டுமன்றி அரசியல் ஈடுபாடு கொண்ட பொதுமக்கள் எனப் பலரும் நூற்றுக்கணக்கானோர் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலம் நேற்றிரவு ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றிரவு 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

30க்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட, யாழ்.இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தை உடைய, பழனி செல்வராசா என்பவரின் சடலமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர் எங்கு வைத்துச் சுடப்பட்டார் என்ற தகவல் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (அ-1-78)

## கிளாலி முன்னரங்கில் மோதல்!

கொழும்பு, ஒக். 26

கிளாலியிலுள்ள முன்னரங்க நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் படைச்சிப்பாய்கள் இருவர் படுகாயமடைந்திருக்கின்றனர் என்று படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்

இந்த முன்னரங்க நிலைக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவித்தாக்குதல் தொடுத்த வேளையிலேயே மோதல் வெடித்தது என்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பெரியதம்பனையில் கிபிர் தாக்குதல்

கொழும்பு,ஒக்.26

வவுனியா, பெரியதம்பனைப் பகுதியில் நேற்றுக்காலை 9.45 மணியளவில் விமானப்படையினரின் கிபிர் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தியுள்ளன என்று விமானப் படையின் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் இது வெற்றிகரமாக அமைந்திருப்பதாகவும் பேச்சாளர் மேலும் கூறியிருக்கிறார். எனினும், விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவிதத் தகவலும் வெளிவரவில்லை. (சி)

## ஏறாவூரில் பாரிய தேடுதல்

மட்டக்களப்பு, ஒக். 26

ஏறாவூர் பொதுச்சந்தைப் பிரதேசத்தில் நேற்று காலை தொடக்கம் நண்பகல் வரை பாரிய சுற்றிவளைப்புத் தேடுதலொன்று பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டது. இதன் போதுஇப்பிரதேசத்துக்குவெளியூர்களில் இருந்து வருகைதந்த ஆண்களும், பெண்களும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் வாகனங்களும் பரிசோதிக்கப்பட்டன.

ஏறாவூர்பிரதேசத்தில் இனந்தெரியாத ஆயுதக் குழுவினரின் நடமாட்டங்கள் காணப்படுகின்றன என கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

# நிறைமாதக் கர்ப்பிணி உட்பட நால்வர் மன்னாரில் ஷெல் தாக்குதலுக்குப் பலி!

மன்னார், ஒக்டோபர் 26

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பெரியமடுப் பகுதி மீது படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படும் ஷெல் வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலியாகியிருக்கின்றனர். 7 பேர் படுகாயமடைந்திருக்கின்றனர். உயிரிழந்தோரில் நிறைமாதக் கர்ப்பிணித் தாய் ஒருவரும் அவரது சிசுவும் அடங்குகின்றனர்.

நேற்று முற்பகல் 11 மணி முதல் 12 மணி வரை தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஷெல் தாக்குதலிலேயே இந்தக் கோரம் இடம்பெற்றிருப்பதாக இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலில் நிறைமாதக் கர்ப்பிணித் தாயான றஞ்சி (வயது - 20) என்பவர் படுகாயமடைந்த நிலையில் குழந்தையைப் பிரசவித்து இறந்துள்ளார். குழந்தையும் இறந்தே பிறந்துள்ளது. றஞ்சியின் உடன்பிறப்பான 10 வயது கௌசல்யா மற்றும் அவர்களின்

(08ஆம் பக்கம் பார்க்க)

## திஸ்ஸமகாராமவில் தாக்குதல்; 6 கடற்படையினர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக். 26

கடற்படையினரின் வாகனத் தொடரணியை இலக்குவைத்து அம்பாந்தோட்டை தொகுதியிலுள்ள திஸ்ஸமகாராம பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தில் 6 படையினர் பலியாகினர். 12இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இச் சம்பவத்தை படைத்தரப்பின் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார முற்றாக மறுத்துள்ளதுடன், இது ஒரு திட்டமிடப்பட்ட வதந்தி எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் படைத்தரப்புப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் இது குறித்து இணையத்தளம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 'சண்டே லீடர்' வாமணன் வெலிக்கடைச் சிறையில்!

### ஊடக இயக்கங்கள் கடும் கண்டனம்

அமைச்சர் ஒருவரின் முறைப்பாட்டைத் தொடந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட 'சண்டே லீடர்' வார இதழின் இளம் ஊடகவியலாளர் வாமணன், கல்கிஸை பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர்ப் [illegible] பின்னர் வெலிக்கடைச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைக்கு எனக்கூறி குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் கல்கிஸையிலுள்ள அவருடைய இல்லத்திலிருந்து தாயாருடன் 4ஆம் மாடிக்கு நேற்று முன்தினம் மாலை

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
24 ★ 09 ★ 1951



மறைவு
27 ★ 09 ★ 2007

### அமரர் துரைரத்தினம் ஸ்ரீ கனகசபேசன் B.A, P.G.D.E

சமாதான நீதிவான், H.N.D.A, S.L.C.S.I, M.Phil-Edu (புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி-ஆசிரியர்)

அன்புமொழி பேசி அரவணைத்த ஆசானாய்!
துன்பமென்று சொன்னவர்களுக்கு துயர்துடைத்த மேலோனாய்!
காலமெல்லாம் எம்முடனே காத்திருப்பாய் என்றிருந்தோம்!
கோலமெல்லாம் மாற்றி கொடியதுயர் கொன்றதுவோ!
ஞாலம் உள்ள மட்டும் நாம்மறவோம்! உம் நினைவு.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத்தலைவரின் பிரிவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிசெய்த அஞ்சலி, ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளுக்குமே குறிப்பாக, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் உடல் நலம் குன்றியிருந்த வேளையில், பல்வேறுவிதத்திலும் உதவிகள் செய்து சிகிச்சை அளித்த யாழ். போதனாவைத்தியசாலை வைத்தியக் கலாநிதிகள் மற்றும் ஊழியர்கள் அனைத்துத் தரப்பினர்களுக்கும், கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர்கள் ஊழியர்களுக்கும் தனித்துவமான வைத்திய சிகிச்சை அளித்த சுதுமலை சுதேச வைத்திய சிரோண்மணி வைத்திய கலாநிதி பூரண உரோ மகேஸ்வரன் ஐயா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வில்லூரன்றியில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் நாளை (27.10.2007) சனிக்கிழமை பத்தமேனியிலுள்ள இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி. ஸ்ரீமல்லிகாதேவி (மனைவி),
சந்நிதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி. (சி-54122) குடும்பத்தினர்.

## கட்டைவேலி மெ.மி. பாடசாலையில் பரிசளிப்பு விழா

கட்டைவேலி , ஒக். 26

கட்டைவேலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அதிபர் சு.வரதராஜசர்மா தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் வடமராட்சி கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார். (1-275)

## இரு இளைஞரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இரு இளைஞர்களின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டுள்ளன.

படையினரும் பொலிஸாரும் ஒப்படைத்த இச்சடலங்கள் 25, 30 வயது மதிக்கத்தக்க இளைஞர்களினுடையன எனத் தெரிவிக்கப்பட்டது. கிளாலியில் இடம்பெற்ற மோதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களே இவை என படைத்தரப்பினர் தெரிவித்தனர். (1)

## ஆசார்யாபிஷேக சுபமுகூர்த்த அழைப்பு

நீர்வேலி வடக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளின் பிரதமகுருவும், சிறுப்பிட்டி வடக்கு ஞானவைரவர் ஆலயம், சிறுப்பிட்டி சிவபூதவராயர் ஆலயம் ஆகியவற்றின் குருவும், நீர்வேலி வாய்க்காற்றரவை பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தரின் தௌஹித்திரனுமாகிய **சிவஸ்ரீ இராமநாத சர்மா நகுலேஸ்வர சர்மா** விற்கு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வசித்து வருஷம் ஐப்பசி மாதம் 9ஆம் நாள் (28.10.2007) வெள்ளிக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.32 வரையான சுபவேளையில் கீரிமலை சிவஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள் தலைமையில், இணுவில் சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள் அவர்களின் ஆசீர்வாதத்துடனும் நீர்வேலி வாய்க்கற்றரவை பிள்ளையார் கோயில் மண்டபத்தில் ஆசார்யாபிஷேகம் நடைபெற இருப்பதால் மேற்படி ஆலயங்களின் அடியவர்கள் யாவரும் வந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவஸ்ரீ ஆ.இராமநாதசர்மா தம்பதிகள்,
சிவஸ்ரீ நி.சிவகுமாரசர்மா தம்பதிகள்.
(67301)

### நல்லின மரக்கன்று விநியோகம்

மட்டுவில் மத்திப் பகுதியில் அமைக்கப்பட்ட நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்பட்ட நல்லின மரக்கன்றுகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

தேசி, மாதுளை, பப்பாளி, பலாபோன்ற கன்றுகள் விற்பனை செய்யப்படவுள்ளதாக மட்டுவில் மத்தி விவசாய சம்மேளத்தினர் அறிவித்துள்ளனர். (1-207)

### யாழ். லயன்ஸ் கழகத்தின் விசேட நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

லயன்ஸ் ஆளுநர் எஸ். ராகவனின் வருகையை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வில் இந்த செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இந்த நிகழ்வு கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ். ப.நோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (1)

### பங்கீட்டு அட்டை மீளாய்வு

நவாலி, ஒக்.26

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவில் நிவாரணம் பெறுபவர்களினது பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு வருவதாக அப்பிரிவு கிராம சேவையாளர் வை. சந்திரராசா தெரிவித்துள்ளார். (1-100)


# மக்கள் வங்கி

## விசேட அறிவித்தல்

தன்னியக்க டெலர் இயந்திர சேவையில் அவசர திருத்த வேலைகள் இடம்பெறவிருப்பதன் காரணமாக, மக்கள் வங்கியின் PET ATM இயந்திரம் 2007.10.28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 1.30 தொடக்கம் அதிகாலை 5.30 வரை செயற்படமாட்டாது என்பதை தங்களின் கவனத்திற்கு அறியத்தருகிறோம்.

பிரதி பொது முகாமையாளர் (கிளைகள்)
மக்கள் வங்கி

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி


# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் மகேந்திரராஜா

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபரும் (JP), மானிப்பாய் மருதர் பிள்ளையார் கோயில் தீர்த்த உபயகாரர்)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மகேந்திரராஜா நேற்று (25.10.2007) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும், மல்லிகா தேவியின் அன்புக் கணவரும், தவவதனி, தவவரன் (ஆஸ்திரேலியா), தவயோகினி ஆகியோரின் தந்தையும், சந்திரகாந்தன் (Trans Asia Hotel, Colombo), ஆனந்தராசா (சவூதி) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் சகோதரனுமாவார்.

அன்னார் இறுதிக் கிரியைகள் இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேதர்ஸ் லேன், மானிப்பாய்.
தொ.பே: 0214591355.
(67302)
தகவல்:
மகேந்திரராஜா குடும்பத்தினர்.

## செல்வரட்ணம் நகுலேஸ்வரி (டயா)



தெல்லிப்பழை, விராங்கொடையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் நகுலேஸ்வரி (டயா) 22.10.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற செல்வரட்ணத்தின் மனைவியும் வனஜா, சிந்துஜா, நிதுஸ்ராஜன் ஆகியோரின் தாயும் நடராஜா தம்பதியரின் அன்பு மகளும் புஸ்பராஜா (தபாலதிபர், வேலணை), குணரட்ணம் (கனடா), புஸ்பமலர், பத்மராணி, கீதராணி, சாந்தினி, கிருபானந்தன், சிவநேசன், உருத்திரா, உமாசங்கர் (ஆசிரியர்) ஆகியோரின் சகோதரியும் சாந்தி, வசந்தமாலா, செல்வரட்ணம், விஜயகுமார், சிறி. ரவீந்திரதாசன், ஜெயா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது சகோதரியின் இல்லத்தில் (பருத்தித்துறையில்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.Mறோட்,
பருத்தித்துறை.
(67307)
தகவல்:
சகோதரி (தங்கள்),
வே. விஜயகுமார் குடும்பம்.

## கந்தையா குணரத்தினம்



ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குணரத்தினம் (கணேஸ்) 24.10.2007 புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மீனாம்பிகை தம்பதீயரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அப்பாசியார் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், ஐஸ்வரியின் பாசமிகு கணவரும், ஜீவரூபி (கனடா), விஜியரூபி (ஆசிரியை, பெரிய புலம் மகாவித்தியாலயம்), சாந்தரூபி (ஜேர்மனி), பகீதரன் (ஜேர்மனி), ஸ்ரீதரன் (ஜேர்மனி) ஆனந்தரூபி (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்), ஞானரூபி, ஹம்சத்வனி (மாணவி, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதாகரன் (கனடா), ஜெகதீஸ் வரன் (உலக உணவுத் திட்டம்), சிவதாஸ் (ஜேர்மனி), சிவசக்தி (ஜேர்மனி), சுரேக்கா (ஜேர்மனி), தயானந்தன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற குலசேகரம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஐஸ்வரியா, சுரேஸ், சதீஸ், தர்சிகா, விதுஷன், கதிர்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

687/28, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.
(67308)
தகவல்:
குடும்பத்தினர்.

## இராசையா துரைச்சாமி



சங்கானை, பிளாக் றோட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா துரைச்சாமி நேற்று (25.10.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராணியின் கணவரும், கீதா, ரமேஷ், சதீஸ், யாமினி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரைச்சி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
பொன்னையா கிருஸ்ணமூர்த்தி
(மைத்துனர்).
பிளாக் வீதி, சங்கானை.
(67309)

## செல்லையா செல்வரட்ணம்



(இளைப்பாறிய M.S.O., தபால் தரம் பிரிப்பாளர், தபாலகம் கிளிநொச்சி)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, பிரதானவீதி, மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ்ப்பாணம் வேம்படி வீதியை வசித்தவருமாகிய செல்லையா செல்வரட்ணம் 22.10.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.10.2007) சனிக்கிழமை காலை 9 மணிக்கு புனிதஅடைக் கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
கண்டிவீதி, மிருசுவில்.
தற்காலிக முகவரி:
இல 187, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(67310)
தகவல்:-
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று முன்தினம் இடம்பெற்ற நீதிமன்ற வளாகக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு திட்டப் பணிப்பாளர் ஷாமலி குணவர்த்தனா, மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜ், பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் டி.சி.ஜய திலக, மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் பிரதம நீதியரசருடன் யாழ்.ஆயர், நல்லை ஆதீன முதல்வர் ஆகியோர் கலந்துரையாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# அமெரிக்கா அடங்கிய மேற்கத்தைய நாடுகள் எம்மை அடக்கிக் கட்டுப்படுத்தவே வருகின்றன

## அவற்றிடம் மண்டியிடுவது இராஜதுரோகம் என்கிறார் பிரதம நீதியரசர்

யாழ்ப்பாணம்,ஒக்.26

அமெரிக்கா அடங்கிய மேற்கத்தைய நாடுகளின் இலங்கைக்கான உதவி மிகவும் குறைவானதாகும். எங்களை அடக்குவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வரையறைகளை இடுவதற்கும் எமது மக்களின் உரிமைகளை நாம் எவ்வாறு மதிக்கவேண்டும் என்று கற்பிப்பதற்கும் அவர்கள் பிரம்புடன் வருவார்கள். எம்மில் சிலர் அவர்களிடம் போய் மண்டியிட்டு அந்தப் பிரம்பைப் பாவிக்குமாறும் எமது நாட்டின் மீது தடைகளைப் போடுமாறும் இரங்கி நிற்கிறார்கள். இது இராஜதுரோகமேயன்றி வேறொன்றும் அல்ல.

இவ்வாறு தெரிவித்தார் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ். நீதிமன்ற வளாகக் கட்டடத் தொகுதித் திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்தாவது:-

யுத்தமானது இரத்தக்களரியையும், அழிவையும், சோகத்தையும் மற்றும் இன்னோரன்ன துன்பங்களையும் கட்டாயமாக உடன்கொண்டு வருவதோடு, மறுபக்கமாக பரஸ்பர புரிந்துணர்வின்மை, வன்மம் ஆகியவற்றை மக்களிடையே கொண்டு வருகின்றது.

அதேநேரம் சமாதானமும, நீதியும் மக்கள் மனங்களை உயர்ச்சி பெறச் செய்வதுடன் பரஸ்பர மதிப்பையும், மனித நேயத்தையும் அவர்களின் உரிமைகளையும் வெளிக்கொண்டு வருவதுடன் பொருளாதார மேன்மைக்கும், சுபீட்சத்துக்கும் வழிவகுக்கின்றது.

நவீன சரித்திரத்திலேயுள்ள அதி மோசமான பேரழிவுகளும், அவலங்களும், கொலைகளும் இரண்டாம் உலக மகாயுத்தத்தின் விளைவுகளேயாகும். மேற்கே ஐரோப்பாவும், கிழக்கே ஜப்பானும் யுத்தத்தின் இருப்பிடங்களாயிருந்ததுடன் மிக மோசமான விளைவுக ளையும் சந்தித்தன. உலக சரித்திரத்திலேயே முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பேரழிவையும், நாசங்களையும், அவை சந்தித்ததுடன் இலட்சக் கணக்கான மக்களும் கொல்லப்பட்டனர். மனிதனால் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிக மோசமான ஆயுதமான அணு குண்டைப் பயன்படுத்தி ஜப்பான் அடக்கப்பட்டது உங்களுக்குத் தெரியும்.

**இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர்...**

யுத்தத்திற்கு பிற்பாடு ஆயுதங்கள் மற்றும் அணிகலன்கள் மேற்கு ஐரோப்பா மற்றும் ஜப்பானிலிருந்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக ஒற்றுமைக்கும் சமாதானத்திற்கும் அத்திவாரம் இடப்பட்டது. மக்களுக்கான சுதந்திரமும் மனித கௌரவமும் வழங்கப்பட்டதன் மூலமே இது சாத்தியமானது.

1950ஆம் ஆண்டு ரோம் உடன்படிக்கையானது மக்களுக்கு நான்கு வகையான சுதந்திரங்களை வழங்கியது. அதாவது மக்கள் ஓர் இடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்லும் சுதந்திரம், பொருள்களின் மற்றும் சேவைகளின் தாராள போக்குவரத்து மற்றும் நிறுவனங்களின் போக்குவரத்து அல்லது அசைவு ஆகும். மறுபக்கத்தில் சட்ட ஆட்சியை அடிப்படையாகக் கொண்டு ஓர் உறுதியான நீதி வழங்கும் முறை ஸ்தாபிக்கப்பட்டதுடன் மனித உரிமை பாதுகாப்பிற்கான ஓர் உறுதியான உத்தரவாதமுமாயிருந்தது. அவர்கள் காவலரண்களை நிர்மாணிக்கவில்லை. மாறாக காவலரண் தடைகளை நீக்கினார்கள். இதன் பிரதிபலனாக உலகத்திலேயே உறுதியான நாணயத்தைக் கொண்டு ஒரு சந்தையாக ஐரோப்பியக் கூட்டமைப்பாக மாறியுள்ளது. உலக அரங்கிலே வியாபாரத் தடைகளானது முன்னேற்றகரமான முறையில் குறைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிபலனை நீங்கள் அறிவீர்கள். இதன் பலனாக ஜப்பானானது உலகிலேயே பொருளாதார இரட்சகனாக சமாதானத்துக்கும், சட்ட ஒழுங்கிற்கும் ஒரு முன் உதாரணமாக வளர்ந்துள்ளது. இதற்குச் சான்றாகப் பின்வருவனவற்றைக் கூறுகிறேன்.

''இலங்கைக்கு வாக்களிக்கப்பட்ட மொத்த வெளிநாட்டு உதவியில் 41 வீதமான பெரும்பங்கை ஜப்பான் வழங்குகின்றது. அடுத்து பெரிய பங்களிப்பு ஆசிய அபிவிருத்தி வங்கியால் செய்யப்படுகின்றது.

உலகத்தின் மற்ற நாகரிகங்களுக்கு முற்பட்ட ஒரு சிறந்த நாகரிகத்தை மற்றும் சரித்திரத்தைக் கொண்டிருந்தது எமது நாடாகும். மேற்கூறிய நாடுகள் பின்பற்றிய முன்னுதாரணத்திலிருந்தும் அவர்கள் பின்பற்றிய பாதையைத் தொடருவதன் மூலமும் கொடிய அவலங்களை நீக்கிக் கொள்ளமுடியும். ஆனாலும் நான் ஆணித்தரமாகச் சொல்ல வேண்டியது என்னவென்றால் இந்த முயற்சி எம்மிலிருந்து ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் என்பதாகும். நாட்டின் சட்டத்தையும் நீதியையும் அமுல்படுத்துவதன் மூலம் நாம் செய்துள்ளது இதுவே. எங்களுடைய அர்ப்பணிப்புக்கும் கபடமற்ற தன்மைக்கும் முயற்சிகளுக்கும் இந்தக் கட்டடத் தொகுதி ஒரு ஞாபகார்த்தச் சின்னமாக அமையும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது நீதி நியாயத்தின் கோட்டையாக விளங்க வேண்டுமென நாங்கள் பிரார்த்திக்கிறோம் - என்றார். (50)

## யாழ். நகரப் பகுதியிலுள்ள மருந்தகங்களில் அதிகரித்த விலையில் மருந்துகள் விற்பனை

வலி. வடக்கு,ஒக்.26

யாழ்ப்பாணத்தில் உள்ள மருந்தகங்களில் மருந்து வகைகள் மிகவும் அதிகரித்த விலையில் விற்பனை செய்துப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மருந்தகங்களில் எவற்றிலும் விலைப்பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்படுவதில்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மருத்துவர்கள் எழுதிக் கொடுக்கும் மருந்துத் துண்டுகளை வெளியால் உள்ள கடைகளில் கொடுத்து மருந்துகளைப் பெறுகின்றனர்.

இந்நிலையில் ஒவ்வொரு கடையிலும் மாறுபட்ட விலைகளில் மருந்துகள் விற்பனை செய்யபட்டு வருகின்றது. இந்நிலையில் அவற்றைப் பெறுவதில் தாம் சிரமம் அடைந்து வருகின்றன என்று மக்கள் கூறியுள்ளனர்.

மருந்தகங்களும்கூட எந்த வகையான கட்டுப்பாடுகளும் இன்றி அதிக விலைக்கு தாம் விரும்பியவாறு விற்பனை செய்து வருகின்றன.

இதனால் பொதுமக்கள் விலை கூடுதல் என்று தெரிந்துகொண்டும் திருப்பி கேட்டால் மருந்து இல்லையென்று கூறிவிடுவார்கள் என்ற பயத்தில் அதிக விலையைக் கொடுத்து மருந்தை வாங்கி செல்லும் நிலைமை காணப்படுகின்றது.

உரியவர்கள் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பது ஏன் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(203-86)

## புனித ஜோண் பொஸ்கோவில் ஞாயிறு கௌரவிப்பு நிகழ்வு

குருநகர்,ஒக்.26

யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து 2007 ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் வகுப்பு ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என நிகழ்வின் ஏற்பாட்டுச் செயலாளர் இ.பத்மநாதன் தெரிவித்தார்.

(1-51)

## சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.26

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இலங்கைத் திருச்சபையின் யாழ். மாவட்ட குருமுதல்வர் வண.பிதா எஸ்.பி. நேசகுமார் விழாவுக்குத் தலைமை வகிப்பார். உலக சுகாதார நிறுவனத்தின் யாழ். இணைப்பாளர் டாக்டர் என். சிவராஜாவும் அவரது பாரியார் திருமதி மலையரசி சிவராஜாவும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(அ-203)

## நிகழ்வுகள்

கரவெட்டி,ஒக்.26

யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையும் பருத்தித்துறை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையும் இணைந்து இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மாலுசந்தி சின்னத்தம்பி வித்தியாலயத்தில் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளன. (203-70)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 11 வகுப் பில் விவசாயம், கடல்வளம், கட்டட நிர்மாணம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

அத்துடன் தரம் 11இல் புதிய பாடத் திட்டத்திற்கான தமிழ் மொழியும் இலக்கியத்திற்குமான செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இதன்போது ஆசிரியர்களுக்கான [illegible] பனவுகளும் வழங்கப்படவுள்ளன.(203)

யாழ்ப்பாணம்,ஒக்.26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10,11,12,13 ஆகிய வகுப்புகளில் வணிகக் கல்வி, விவசாயம் ஆகிய பாடங்கள் கற்கும் மாணவர்களுக்கிடையிலான குறு வினாப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வணிகக் கல்விப் போட்டிகள் காலை 8.30 மணிக்கும், விவசாய பாடப் போட்டிகள் காலை 9.30 மணிக்கும் ஆரம்பமாகுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

போட்டிகளின் மதிப்பீடுகள் அன்றைய தினமே மேற்கொள்ளப்படவுள்ளதால் இப்பாடங்களின் ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறும் கேட்டுள்ளார். (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.26

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளையினரால் செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகள் தொடர்பான பரப்புரைக் கூட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியிலும் பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கல்வியியற் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இப்பரப்புரைக் கூட்டத்தில் யாழ். மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் [illegible]லிங்கம் தலைமையிலான குழு கலந்துகொள்ளவுள்ளது. (203)

## வர்ணமொழி கண்காட்சி இன்றுடன் நிறைவடைகிறது

மருதனார்மடம்,ஒக்.26

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தின் சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களினால் நடத்தப்படும் வர்ணமொழி சித்திர ஓவியக் கண்காட்சி இன்றுடன் நிறைவடையவுள்ளது.

கடந்த ஆறு நாள்ளாக இடம்பெற்ற இக்கண்காட்சியை கொட்டும் மழையிலும் சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்களும் பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள்.

கண்காட்சியைப் பார்வையிட்டு செல்பவர்களினால் எழுதுவதற்காக வைக்கப்பட்டுள்ள விமர்சனக்குறிப்பேட்டில் பலகோடி ரூபா பெறுமதியான சிற்பங்கள், ஓவியங்களை வெறும் 20 ரூபாவில் பார்வையிட்டுச் செல்லக் கிடைத்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் விடுறை தினமாக இருந்தமையால் ஆயிரக்கணக்கான மாணவர்களும் அரச ஊழியர்களும் பொதுமக்களும் பார்வையிட்டுச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. (203-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வாழ்த்து



இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை சுபமங்கள வேளையில் திருமண பந்தத்தில் இணையும்

திரு.நாகராஜா தெய்வத்திருமதி கனகாம்பிகை தம்பதியரின்
சிரேஷ்ட புதல்வன்
**நா.விஜயரட்ணம்** (மனோ)
(உரிமையாளர், நாகராஜேஸ்வரி மோட்டோர்ஸ்)

தெய்வத் திரு.திருமதி குமாரராஜ வேலுப்பிள்ளை தம்பதியரின்
ஏகபுத்திரி
**கு.றசிகலா** (றசி)

இருவரும் சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.த.நாகராஜா (அப்பா), திரு.திருமதி ஜெயச்சந்திரன் குடும்பம், திரு.திருமதி கணேசகுமாரன் குடும்பம், ஊழியர்கள், வாடிக்கையார்கள்
(நாகராஜேஸ்வரி மோட்டோர்ஸ்)

NAGARAJESWARY MOTORS,
797, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

9/3, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

## நீர்சுத்திகரிப்பு தாங்கிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.26

மட்டுவில் சந்திரபுரம் பகுதியில் உள்ள இரண்டு முன் பள்ளிகளுக்கு நீர் சுத்திகரிப்பு தாங்கிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதிய நிறுவனத்தினர் அப்பகுதியில் உள்ள ஜோதி முன்பள்ளி, அம்பாள் முன்பள்ளி ஆகியவற்றின் ஆசிரியைகளிடம் அண்மையில் தாங்கிகளை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-207)

# 10ஆவது பிறந்தநாளும் பாராட்டி வாழ்த்தும்



2007ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த
யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய
மாணவி
**செல்வி தியாகராஜா மிதுஷா**

அவர்களைப் பிறந்தநாள் வாழ்த்துடன் மேலும் கல்வியில் பல சிறப்புகள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கம் அளித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அன்பொளி கல்வி நிலைய **திரு.வே.அன்பழகன், செல்வி நா.சிவகௌரி, அ.நிமல்ராஜ், பெ.பிரியதர்சினி, அ.மதன்ராஜ்** அனைவரையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(67273)

வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, சாந்தனா (அக்கா),
அம்மம்மா, கௌரி அன்ரா,
பெரியப்பா குடும்பம், மாமா குடும்பம்.


# 15.10.2007 முதல் 08.11.2007 வரை

## தீபாவளி மலிவு விற்பனை

நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும் விசேட கழிவு
உடனே விஜயஞ் செய்யுங்கள்

## லைடன் புடவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம் தொ.பே: 222 2381

(தீபாவளிப் பண்டிகைவரை வரும் சனி, ஞாயிறு தினங்களிலும் கடை திறந்திருக்கும்)

(சி/53968)


# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் B.A**

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர்,
யாழ்.பல்கலைக்கழக பேரவையின் முன்னாள் உறுப்பினர்,
வலி.வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர்

தோற்றம்: 07.01.1932

மறைவு 26.10.1999

பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன்,
மல்லாகம். (67273)

# கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும்
யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் உபதலைவருமான

**சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்**

அவர்கள் அகால மரணமடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பொதுமுகாமையாளர், பணியாளர்கள்,
யாழ்.பல.நோ.கூ.சங்கம், யாழ்ப்பாணம். (சி/54113)

# கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும்
யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும்
யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் உபதலைவருமான

**சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்**

அவர்கள் அகாலமரணமடைந்த செய்தி கேள்வியுற்று அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பொதுமுகாமையாளர், பணியாளர்கள்.
(சி/54109) ப.நோ.கூ.சங்கம் - அச்சுவேலி.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிக் காணிக்கையும்



எமமை எல்லாம் ஆறாத் துயரத்தில் ஆழத்தி விட்டு 27.09.2007 அன்று காலை மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவர்

**சுப்பையா இரத்தினசபாபதி** (அப்பாத்துரை)

அவர்கள் இறைபதம் அடைந்த வேளையில் உடனிருந்து உதவியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமும் கடிதம் மற்றும் தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துகொள்வதுடன் நாளை (27.10.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

தயவுசெய்து இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சீக்கோ லேன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் (67278) **குடும்பத்தவர்கள்.**

# O/L மாணவர்களுக்குரிய தமிழ்ப் பாடக் கருத்தரங்கு

இடம்: நியூ பிறைற் கல்வி நிலையம்
மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.
திகதி: 27.10.2007 சனிக்கிழமை
பிரிவு:-I - 8.00 - 11.00 வரை
பிரிவு:-II -11.30-2.30 வரை
முற்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
வெளிமாணவர்கள் பங்குபற்றலாம்.
வரையறுக்கப்பட்ட அனுமதிகள்
(67281) ஆசிரியர்:- **ஜி.ஜனகன்.**

# தவறிவிட்டது

வேலணை கிழக்கு, 3ஆம் வட்டாரம் என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தசாமி லக்ஸ்மன் என்பவரது தேசிய அ.அட்டை (862392078V), விசேட அ.அட்டை என்பன 24.10.2007 அன்று சட்டநாதர் கோயிலுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 424, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(67304)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்/கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான

**ஆபேல் அந்தோனிப்பிள்ளை**
(பேரின்பம்)

அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தாரின் துக்கத்தில் நாமும் பங்கெடுப்பதுடன் அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் இறைவனை மன்றாடுகின்றோம்.

கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம்.

**இயக்குநரும், ஊழியர்களும்.**

# மரண அறிவித்தல்

## கந்தையா புஸ்பராசா (துரை)

(முன்னாள் சாரதி - செந்தாவான்)



கட்டுவனைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியைப் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா புஸ்பராசா 24.10.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி பீதாம்பரம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மலோஜினி(தேவி)யின் பாசமிகு கணவரும் பத்மராசா (பத்து), மலர்விழி (லதா), கமலதாசன் (கமல் - இத்தாலி), பகீரதன் (கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான பாலு, மணியம், செல்வராசா, குஞ்சன் மற்றும் அன்னரத்தினம், மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மீனலோஜினி (கனடா), சிவலோஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சத்திகா, லோயிதா, சஞ்சிகா, கீர்த்திகா, லக்சப் பிரியன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு.
(சி/51109)

தகவல்:
திருமதி ப.சுகந்தினி
(மருமகன்).

# கண்ணீர் அஞ்சலி

பிரபல தவில் வித்துவான்
'லயஞானசுரபி' 'லயஞானமணி'

**கந்தசாமி நித்தியானந்தன்**



அவர்கள் கனடாவில் காலமான செய்தியறிந்து மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கோண்டாவில். ஜெயராமன் கிருபாகரன், குமாரதாஸ் நாகதீபன்.

# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.08.2006இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி - 104 | | மக்கள் வங்கி, யாழ்.கன்னாதிட்டி - 284 |
| 2 | சேவை நிலையம், உரும்பிராய் | | |
| 3 | சாவகச்சேரி - 110 | | |
| 4 | சேவை நிலையம், கொடிகாமம் | | |
| 5 | யாழ்.பல்கலைக்கழகம் -162 | 2007.12.01 | |
| 6 | சேவை நிலையம், திருநெல்வேலி | 2007.12/02 | |
| 7 | யாழ்.கன்னாதிட்டி - 284 | 2007.12.03 | |
| 8 | சேவை நிலையம், இணுவில் | 2007.12.04 | |
| 9 | யாழ்.ஸ்ரான்லி வீதி-030 | 2007.12.08 | |
| 10 | சேவை நிலையம், மானிப்பாய் | 2007.12.09 | |
| 11 | காங்கேசன்துறை - 031 | 2007.12.10 | |
| 12 | சேவை நிலையம், மல்லாகம் | 2007.12.11 | |
| 13 | அச்சுவேலி - 107 | & | |
| 14 | சங்கானை - 108 | 2007.12.12 | |
| 15 | சுன்னாகம் - 109 | | |
| 16 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 17 | நெல்லியடி - 106 | | |
| 18 | பருத்தித்துறை - 285 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**உதவிப் பொதுமுகாமையாளர்,**
வடவலயம், மக்கள் வங்கி பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/54111)

# 12ஆம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 15 * 05 * 1984



தோற்றம் 18 * 11 * 1981

**செ.தேவச்செல்வன்** (தேவன்)

**செ.சதீஸ்குமார்** (செந்தில்)

மறைவு: 26.10.1996

*பத்தாம் மாதம் என்றதும்*
*பதறுகிறது எம் நெஞ்சம்*
*தலை பறந்து உடல் சிதறி கிடந்து*
*இன்றுடன் 12 வருடங்கள் ஆகிறது.*

இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி: நாவலடி, அரியாலை.

தற்காலிக முகவரி: 50A, பிறவுண் வீதி, கொக்குவில்.

(67161)

**செல்வராசா மகேஸ்வரி குடும்பம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெல் 212 ஹெலியைச் சுட்டது புலிகளா? இராணுவத்தினரா?

கொழும்பு, ஒக். 26

அநுராதபுரம் விமானப் படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்திய வேளை வவுனியாவிலிருந்து புறப்பட்ட பெல் - 212 ரக ஹெலிக்கொப்டரை படையினரா விடுதலைப் புலிகளா சுட்டு வீழ்த்தினர் என்பதில் குழப்பம் ஏற்பட்டிருப்பதாக கொழும்பு ஆங்கில நாளேடான 'டெய்லிமிரர்' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

வவுனியா விமானப்படைத்தளத்தில் இருந்து பெல் - 212 ரக உலங்கு வானூர்தியில் புறப்படும் முன்னர் அதன் பிரதான விமானியான ஸ்குவாட்றன் லீடர் அமில மொகாரி "நான் உயிருடன் திரும்பி வருவேன் என்பது நிச்சயமற்றது. எனவே இந்தச் சங்கிலியை எனது மனைவியிடம் கொடுத்துவிடு" என்று தனது கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழற்றித் தன்னிடம் தந்தார் என அவரின் சக விமானி தெரிவித்துள்ளார்.

எனினும் தளத்தில் இருந்து மேல் எழுந்த அவரது வானூர்தி தரையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட விமான எதிர்ப்புத் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி தளத்தில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள மிகிந்தலையில் வீழ்ந்து நொறுங்கியுள்ளது.

இந்த ஹெலிக்கொப்டர் வவுனியா வான் படைத்தளத்தை அண்டிய பகுதியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே வீழ்ந்து நொறுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இந்த விமான எதிர்ப்புத் துப்பாக்கித் தாக்குதல் படையினரால் மேற்கொள்ளப்பட்டதா அல்லது படைத்தளத்திற்கு அண்மையாக ஊடுருவிய விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதா என்பது குறித்த விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே அநுராதபுரம் வான் படைத்தளத்தின் வான் பகுதியில் பறக்கும் எந்த விமானங்களையும் சுட்டு வீழ்த்தும் படியும், அரசின் விமானங்கள் எவையும் அநுராதபுரம் வான் பரப்பில் இல்லை எனவும் கொழும்பு தலைமைப்பீடம் உத்தரவுகளை வழங்கியதாக தனது பெயரைக் குறிப்பிட விரும்பாத அந்த விமானி மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் அநுராதபுரம் படைத் தலைமையகங்களுக்கு இடையில் ஏற்பட்ட தவறான தொடர்பாடல்களாலேயே பெல் - 212 ரக ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# பேராதனை பல்கலை உபவேந்தர் மாணவர்களால் தடுத்துவைப்பு

கொழும்பு,ஒக். 25

பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் விரிவுரையாளர்கள் 19 பேரை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகக் கட்டடத் தொகுதியில் பணயக் கைதிகளாக தடுத்து வைத்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் எட்டுப்பேருக்கெதிராக வகுப்புத் தடை விதிக்கப்பட்டதையடுத்து அந்தத் தடையை நீக்குமாறு கோரியே மாணவர்கள் துணைவேந்தர் உட்பட்டோரை பணயக்கைதிகளாகத் தடுத்து வைத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

## முகராசி எப்படியானது...?

மகாராஜா ஒருவர் தினமும் காலையில் எழுந்தவுடன் ஜன்னலைத் திறந்து பார்ப்பது வழக்கம்.

சந்நியாசி, அந்தணர், பசு, ஆண், பெண் என்றெல்லாம் மகாராஜா, இன்று காலையில் யார் முகத்தை முதன் முதலில் பார்க்கின்றோம் என்று கவனிப்பார்.

நல்லது நடந்தாலும், அல்லது கெட்டது நடந்தாலும், இன்று காலையில் இவர் முகத்தில் விழித்ததால்தான் இப்படி நடந்தது என்று மகாராஜா நினைத்துக் கொள்வார்.

ஒருநாள் காலையில் விவசாயி ஒருவன், அரண்மனை அருகில் கூடையைத் தன் தலையில் கவிழ்த்து எடுத்துக்கொண்டு போனான்.

அவன், அரசர் ஜன்னலைத் திறந்து பார்ப்பதைக் கவனித்தான்.

ஆதலால் விவசாயி தன் தலையில் இருந்த கூடையைச் சற்று தூக்கி மரியாதையு டன் அரசரைப் பார்த்தான்.

மன்னர், "இன்று காலையில் நான் ஒரு விவசாயின் முகத்தில் விழித்திருக்கிறேன். இன்று நாள் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும்!" என்று நினைத்தபடியே உள்ளே செல்லத் திரும்பினார்.

ஞானக்கதிர்

அப்போது ஜன்னலின் கம்பி அரசர் தலையில் பட்டு இரத்தம் வழிந்தது.

உடனே அரசர் காவலாளிகளைக் கூப்பிட்டு, "அங்கே ஒரு விவசாயி சென்று கொண்டிருக்கிறான்! அவன் தலையை உடனே வெட்டுங்கள்! இந்த விவசாயி உயிருடன் இருந்தால், நம் நாட்டிலுள்ள மக்களுக்கு என்னென்ன துன்பங்கள் ஏற்படுமோ!" என்றான்.

காவலாளிகள் விவசாயியைப் பிடித்து வந்து அரசர் முன் நிறுத்தினார்கள்.

விவசாயி அரசரை மரியாதையுடன் கை கூப்பி வணங்கி, "மகாராஜா! காலையில் என் முகத்தில் நீங்கள் விழித்ததால், உங்களுக்குத் தலையில் மட்டும்தான் அடிபட்டது. ஆனால் நான் உங்கள் முகத்தில் விழித்ததால் இப்போது என் தலையே போகப் போகிறது! இதிலிருந்து என் முகராசியை விட உங்கள் முகராசிதான் மோசம் என்ற உண்மை உறுதியாகிறது" என்று அமைதியுடன் கூறினான்.

யோசித்துப் பார்த்த அரசருக்குத் தன் தவறு புரிந்தது.

அவர், 'இந்த விவசாயியை நாம் தண்டிப்பதில் நியாயமில்லை' என்று உணர்ந்தார்.

அரசர் விவசாயிக்கு ஐந்து பொற்காசுகளைக் கொடுத்து, நான் உனக்குத் தண்டனை தர நினைத்தது தவறு. நீ சென்று மகிழ்ச்சியாக இரு என்று கூறி அனுப்பி வைத்தார்.

எனவே நாம் ஒரு பிரச்சினை என்று வரும்போது - இதை நாம் நம் நிலையில் இருந்து மட்டும் பார்க்காமல் - அடுத்தவர் நிலையில் இருந்தும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதுதான் உண்மையை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2008

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2007 நவம்பர் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

### வழங்கல்கள்

01) எழுதுபொருள்கள்
02) புத்தகங்கள், பருவ வெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03) அலுவலக தளபாடம் - மரம்
04) அலுவலக உபகரணம்(ஸ்ரீல்)
05) அலுவலக இயந்திரங்கள்( தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோக் கொப்பி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன)
06) சகல வகையான காட்வெயார் பொருள்கள்
07) பெயிண்டுகள், வாணிஸ்
08) இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
09) மின்சார சாதனமும் உதிரிப்பாகங்களும்
10) வெட்டும் கருவிகளும் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
11) ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்
12) ஆய்வு கூடச் சாதனங்கள்
13) ஆய்வுகூட இரசயானப் பொருள்களும் கண்ணாடிச் சாதனங்களும்.
14) மரங்கள் - தீராந்தி, பனைமரம், சிலாகைகள்.
15) கட்டடப்பொருள்கள்(மணல், செங்கல், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
16) தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள் முதலியன
17) டயர், ரியூப்புகள், பற்றரிகள்
18) மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்
19) ஆயுள்வேத மருந்துகள்
20) மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
21) விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
22) தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்
23) மழைக்கோட்டுக்கள், சேற்று சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துகள் முதலியன.
24) பைப்புக்கள், பைப் இணைப்புக்கள்
25) பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்
26) மட்பாண்ட பொருள்கள் கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்.
27) தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள்
28) கணனி உட்பட எலக்ரோணிக் பொருள்கள்
29) கணனி மேசை, கதிரைகள்

### சேவைகள்

01) அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்.
02) அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதி பண்ணும் இயந்திரங்கள், பக்ஸ், கொம்பியூட்டர், மின் தட்டச்சு இயந்திரங்கள்) திருத்த வேலைகள்.
03) குளிர்சாதனப் பெட்டிகள், எயார் கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புக்களும்.
04) ஸ்ரீல் தளபாட திருத்த வேலைகள்
05) மரத் தளபாட திருத்த வேலைகள்
06) கதிரை பின்னுதல்
07) உடைகள் கதவு ஜன்னல்கள் திரைச்சீலைகள் தைத்தல்
08) பெயர்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் செய்தலும்
09) உடைகளைச் சலவை செய்தல்
10) புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் பைண்டிங் செய்தல்
11) மோட்டார் வாகனம் திருத்தல்
12) கணனி திருத்த வேலை.

### எந்திரவியல் சேவைகள்

01) மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிரூட்டிகள் என்பன திருத்துதல்.
02) குடிசார் எந்திரவியல், வேலைகள் கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்தவேலைகளும்
03) மின்சார வயறிங் வேலைகள்
04) நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்த வேலைகள்
05) இரும்பு, அலுமினியம் என்பனவற்றாலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும், பொருத்தலும்.
06) கட்டடங்கள்/கட்டட சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்களுக்கான உசாத்துணை சேவைகள்.
07) நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல்/பொருத்துதல்/தச்சுவேலை/ குளிரூட்டிகள்
08) எந்திரவியல் சார் வரைதலும் நீலப் பிரதி செய்தலும்
09) கறையான் பீடைகள் ஒழிப்பு வேலைகள்
10) தொழிலாளர் வழங்கல் தரம் சார், தரம் சாரா மற்றும் காவலாளிகள்)

### பதிவு தொடர்பான நிபந்தனைகள்

01) கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'வழங்கல்கள் சேவைகள் 2008' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
* பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் "நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்" என முகவரியிடல் வேண்டும்.

02) ஒவ்வொரு வழங்கல் / சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா 500/= பெறுமதியான காசுக்கட்டளை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் எனும் பெயரிற்கு பெறப்பட்டு யாழ். தபாற்கந்தோரில் மாற்றக்கூடியதாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.
03) விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலை மனுக்களை கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.
04) கோரப்படும் போது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள்/ சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.
05) ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   1) விண்ணப்பிக்கும் வழங்கும்/சேவை
   2) பெயரும் விலாசமும்
   3) தொலைபேசி இலக்கம்
   4) வியாபாரப் பதிவின் இலக்கம் திகதியும்(வியாபாரப் பதிவுப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
   5) வியாபாரத்தின் தன்மை
   6) வங்கியாளர்களின் பெயர்
   7) கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்
   8) ICTAD பதிவு இலக்கம்/புத்தக இலக்கம்(எந்திரவியல் சேவை 2 இற்கு மட்டும்) ICTAD பதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000/= இற்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்க மட்டுமே தகுதியடையவராவர்.

குறிப்பு
வியாபாரப் பதிவுப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படாதவிடத்து பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்

06) விண்ணப்பதாரர் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். அத்துடன் அம்மாவட்டத்திலுள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
07) விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 6 இற்கு மட்டும்) தருக.
08) சேவைகளை / வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.
9) மேலதிக விவரங்களுக்கு சிரேஷ்ட உதவி (வழங்கல்) நிதியாளருடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே இல. 021 2222644

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(அ/54120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
## முத்துலிங்கம் புனிதவதி

தோற்றம் 24*01*1944 மறைவு 27*09*2007

கடந்த 27.09.2007 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி முத்துலிங்கம் புனிதவதி அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு தமது அஞ்சலிகளைச் செலுத்திய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை (27.10.2007) சனிக்கிழமை காலை 7 மணிக்கு தம்பசிட்டி தெணியம்மன் மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகளிலும் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

நாகலிங்க முதலியார் வீதி,
பருத்தித்துறை. (சி/54116) **பிள்ளைகள்.**

# இதயக் கமலத்தில் பதினேழாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
15 ★ 04 ★ 1904



பொன்னுலகில்
30 ★ 10 ★ 1990

## அமரர் வேலாயுதர் சிதம்பரப்பிள்ளை

திதி: அபரபக்க பிரதமை 26.10.2007

அப்பாவே! எங்கள் அருள் நிறைந்த ஆலயமே!
ஆண்டு பதினேழானாலும் அன்புமொழி கேட்கிறது
இயற்கை எழில் நிறைந்த இதமான ஊரினிலே
இயலும் வரை உழைத்து ஏற்றமுடன் திகழ்ந்திரே!

கண்ணை இமை காப்பதுபோல் காலமெல்லாம் காப்பாற்றி
கணப்பொழுதில் மறைந்தீரே கருணைமிக்க அப்பாவே!
சீரிய நற்பண்புகளை சிந்தையிலே தினம் இருத்தி
செல்வப் புதல்வர்களை சிறப்பாய் வளர்த்து விட்டீர்

இல்லறமாம் ஓடமதை இனிதே செலுத்தி வைத்தீர்
இணைபிரியா மனைவி மக்கள் இகமதிலே மகிழ்ந்திருக்க
அன்பின் உறைவிடமே அகம் நிறைந்த ஒளிவிளக்கே
ஆணமட்டும் பிள்ளைகளை அறிவுடையோர் ஆக்கினீரே

நீர்க்குமிழி போன்ற நிலையில்லா இவ்வுலகில்
நீர்க்கதியாய் விட்டு நிமலனடி சேர்ந்தீரே!
உள்ளம் உருகிறதே உங்கள் நினைவாலே
ஊரெங்கும் தேடுகிறோம் உணர்வீரோ உத்தமரே!

(67277)

குடியிருப்பு,
மந்துவில் வடக்கு, கொடிகாமம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

# 30 ஆவது வருட குருத்துவ நினைவு நாள் நினைவஞ்சலி



## அருட்பணி B.F.பொணிபஸ் அடிகள்

பிறப்பு 14.05.1947

இறப்பு 27.08.2007

எம் உணர்வுகளில் உன் நினைவை
தடம் பதித்த எம் குருவே
இறைவன் எமக்களித்த உறவுகளில்
நீர் எங்களின் பெரும் பேறு

அன்பின் வழி எமக்குள் ஆணிவேர் விட்ட - உம்மை
துன்ப வழி சாவு காவு கொண்டதேனோ?
பெற்றவளும் உறவுகளும் பேதலித்து ஏங்கி நிற்க
கணப்பொழுதில் காலனவன் கவர்ந்து சென்றதேனோ?

உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுத்தீர்
உத்தமன் யேசு பாதையில நீர் சென்றீர்

பணித் தள மதில் இடர்பல நீர் கண்டீர்
இன்பமாய் ஏற்றீர் துணிவுடன் செயற்பட்டீர்

முப்பது ஆண்டுகள் முழுமையாய் பணிபுரிந்தீர்
பாதி வழியில் பரமன் சரண் புகுந்தீர்
குணப்படுத்தும் பணியதனில் பல திட்டம் உம்மிடத்தே
பாங்குடன் முடிக்குமுன்னே இறையுறவில் இணைந்திட்டீர்

உயர்ந்த உன் உருவமதும் பூரித்த முக எழிலும்
கள்ளமற்ற உள்ளமும் கலகலத்த சிரிப்பொலியும்
எண்ணமதில் நிறைந்துவிட்ட உன் உருவமதும்
காலங்கள் யுகங்கள் கடந்தாலும் எம் நெஞ்சை விட்டகலாது.

(சி/54119)

*இரங்கற் திருப்பலி இன்று (26.10.2007) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் நிறைவேற்றப்படும்.*

66, 6ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

திருமதி யூலியஸ் யூஜின் (சகோதரி),
திரு.திருமதி பிறேமா யேசுதாசன் குடும்பத்தினர்.

# கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA சிவப்பு, வெள்ளைப்பேட்டுக் குஞ்சுகள் 28.10.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு:
**றாஜீவ்,** நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
(67135) T.P.: 222 3529, 222 2867

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் நித்தியானந்தம் பிரசாந்தன் அவர்களின் அன்புத் தந்தை



**கந்தசாமி நித்தியானந்தம்**
(பிரபல தவில் வித்துவான்)

அவர்கள் 19.10.2007 கனடாவில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தரம் 10 மாணவர்கள்,
எவரெஸ்ற் கல்வி நிலையம், இணுவில். (67297)

# சுகாதாரப் பணிமனை கணக்காளர் இடமாற்றம்

குருநகர்,ஒக்.26

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் கணக்காளராகக் கடமையாற்றிய க.தனரஞ்சிதராஜன் திருகோணமலையில் அமைந்துள்ள வடமாகாண பொதுநிர்வாக அமைச்சிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்.வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் கே.ஆர்.துரைசிங்கம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளார்.

(203-51-207)

# வாய்ப்பாடு மனனப்போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்று வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான வாய்ப்பாடு மனனப் போட்டிகள் நாளை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஒன்று தொடக்கம் 10 வரையான வாய்ப்பாட்டினை மனனஞ் செய்யும் மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுமென வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

# பதவி வெற்றிடம்

## ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**01. பதவி வெற்றிடம்**

கீழ்க்கண்ட பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

பதவி: **பொதுமுகாமையாளர்**

பதவி கு.இல: 101/08

சம்பளத் திட்டம்: (66/2006 சுற்றுநிருபப்படி) 11200-14100
140X10- 150X10

**02. கல்வித்தகைமைகள்**

அ) கூட்டுறவுப்பணியாளர் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3வருடத்திற்குக் குறையாத அனுபவம்/10ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 6வருடத்திற்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் ஸ்தாபனம் ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உ/த) சித்தி, க.பொ.த.(உ/த) 03 பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**03. வயதெல்லை: 18-45 வரை**

விண்ணப்ப முடிவு திகதி: 25.11.2007

குறிப்பு:

01. வயதெல்லை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்களது சங்கத்தின் ஊடாக அனுப்புதல்வேண்டும்.
02. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.
03. அனுப்பவேண்டிய முகவரி:

**தலைவர்,**
ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
வைத்தியசாலை வீதி, ஊர்காவற்றுறை.

(67292)

## பெண்களுக்கான ஆசியப் பல்கலைக்கழகம் (AUM)

### புதுமையான ஒரு கல்வி வாய்ப்பு! பெண்களுக்கான ஆசியப் பல்கலைக்கழகத்தில் இணையுங்கள்

பெண்களுக்கான ஆசியப் பல்கலைக்கழகமானது (AUM) பங்களாதேசில் உள்ள ஷிட்டங்கொங் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இது 2008 மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தனது முதலாவது "அக்ஸஸ் அக்கடமி" பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை கோருகின்றது. இந்த பயிற்சி நெறியானது பட்டப் படிப்பைப் பெறவுள்ளவர்கள் கணனி ஆங்கிலம், பகுப்பாய்வுத் திறன்களில் வலுவான நிலையை அடைய உதவுகின்றது.

**ஆசியப் பல்கலைக்கழகமானது பின்வருவனவற்றை வழங்கும்:**

- பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒரு வருடகால அடிப்படை திட்டமான "அக்ஸஸ் அக்கடமி" பயிற்சித் திட்டத்தை வழங்குகின்றது. ஆனால் அரம்பத் தொகுதி மாணவிகளுக்கு இது 18 மாத காலப் பயிற்சிநெறியாக அமையும்.
- "அகஸஸ் அக்கடமி" பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக முடித்தவர்கள் பெண்களுக்கான ஆசியப் பல்கலைக்கழகத்திற்கு (AUM) அனுமதிக்கப்படுவார்கள்.
- இது மூன்று வருடப் பட்டப் படிப்பு கல்வியினை சமூக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம், கலை மற்றும் மனிதப் பண்புகள் ஆகிய துறைக்கான அடிப்படையாகக் கொண்டு செப்ரெம்பர் 2009இல் ஆரம்பிக்கப்படுகின்றது. அத்துடன் இரண்டு ஆண்டுகளுக்கான பட்டப்பின் படிப்பு கற்கை நெறியினையும் வியாபார முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சூழல் பொறியியல், பொதுமக்கள் கொள்கை மற்றும் கல்வி ஆகிய துறைகளை அடிப்படையாகக் கொண்டு வழங்குகின்றது.
- மாணவர் ஆசிரியர் விதமானது 13:1 என்ற விதத்தில் இருப்பதுடன் போதுமான வசதியினை மாணவர்களுக்கு வழங்குவதுடன் அவர்கள் நலனில் போதியளவு அக்கறையினையும் கொண்டுள்ளது.
- குறிப்பிடத்தக்க மாணவர்களுக்கு அவர்களுடைய தனியார் வகுப்பு செலவு அறை வாடகை கல்விக்கான உபகரணங்கள் புத்தகச் செலவு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் என்பவற்றை சமாளிப்பதற்கான புலமைப் பரிசிர்கள் வழங்கப்படும்.

**அக்ஸஸ் அக்கடமி**

மாணவர்கள்: முதலாவது பிரிவுக்குரிய மாணவர்கள் பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, நேபாள், கம்போடியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளிலிருந்து வருவார்கள்.

பீடம்: அமெரிக்காவின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் இருந்து 10 ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இடம்: பங்களாதேசில் ஷிட்டங்கொங் என்னுமிடத்தில் புதிய கட்டிடத் தொகுதியில் அக்ஸஸ் அக்கடமி அமைப் பெற்றிருக்கும்.

- கல்வி கற்பதற்கான அறை, நூலகம், கணனி அறை வதிவிடம், உணவு உண்ணல் வசதிகள் ஆகியவற்றுடன் உடல்பயிற்சி இடம் மற்றும் பொழுது போக்குவசதிகள் காணப்படுகின்றன.
- நம்பகமான பாதுகாப்பு பராமரிப்பு முறையினை வழங்கக் கூடியதாக இருக்கின்றது.

செலவு: தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு தேவைக்கேற்ப புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். அவர்கள் தங்களுடைய தனியார் வகுப்பு அறை வாடகை, கல்வி உபகரண செலவு, புத்தகம் மற்றும் பிரயாண செலவுகள் என்பவற்றிற்கு பயன்படுத்தலாம்.

**நுழைவுக்கான கல்வி தெரிவுக்குரிய அடிப்படை தகைமைகள்:**

- ஆகக் குறைந்தது 17 வயதாக இருப்பதுடன் 25 வயதிற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். அத்துடன் இவர்கள் தமது க.பொ.த(உயர்தரக்) கல்வியினை முடித்தவர்களாக இருக்க வேண்டும்.
- 60% மான புள்ளிகள் அல்லது அதற்குச் சமனான வகுப்புடைய புள்ளிகளை தமது கடைசியாக இடம்பெற்ற பொதுப் பரீட்சையில் பெற்றதுடன் ஆகக் குறைந்தது 60% மான புள்ளிகளை ஆங்கிலத்தில் பெற்றிருத்தல் வேண்டும்.
- சமுதாய நடவடிக்கைகளிலும் விஷேட திறமைகளிலும் யார் தங்களுடைய திறமைகளை கொண்டுள்ளார்களோ புள்ளித்திட்டங்கள் அதற்கேற்ப தளர்த்தப்படும்.

**பின்வரும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**Sewa Lanka Foundation**
District Office,
250, Temple Road, Nallur.

Tel: 021 2229850
Fax: 021 2229850
E-mail: jaffna@sewalanka.org

www.asian-university.org/admissions என்ற இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 01.11.2007 இற்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி: 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

## உலகின் மனச்சாட்சியை தட்டியெழுப்பும் ஹிலாரி

''பயங்கரவாதம் எங்கிருந்தாலும் பயங்கரவாதமே. அதில் நல்லதென ஒன்றுமே இல்லை.'' - இப்படி சர்வதேச சமூகத்தின் உயர் அவையான ஐக்கிய நாடுகள் சபையின் மையத்தில் நின்றுகொண்டு கடந்த மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்களத்தில் முழக்கமிட்ட வாசகங்களை இப்பத்தியில் குறிப்பிட்டு 'எது பயங்கரவாதம்?' - என்று அப்போது கேள்வி எழுப்பியிருந்தோம்.

வாழ்வியல் இருப்புக்காக, நீதியுடன் கூடிய உரிமைகளுக்காக, நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யவேண்டி, தமிழர் தேசம் நடத்தும் விடுதலைப் போராட்டம் 'பயங்கரவாதமாக' தவறாகச் சித்திரிக்கப்படுகின்றது என்பதைக் குறிப்பிட்டு புலிகளின் தலைவர் பிரபாகரன் விசனத்துடன் கூறிய வாசகங்களும் அதில் இடம்பெற்றிருந்தன.

*''பயங்கரவாதம் என்ற சொற்பதத்திற்கு ஒரு தெளிவான - தீர்க்கமான - வரைவிலக்கணம் இல்லாததால் தர்மத்தின் வழியே நிகழும் நியாயமான அரசியல் போராட்டங்களும் பயங்கரவாதமாகத் திரிபுபடுத்தப்படுகின்றன.*

*''இந்த வகையில் இனவாத ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடும் சுதந்திர இயக்கங்களுக்கும் பயங்கரவாதச் சேறு பூசப்படுகின்றது.*

*''பயங்கரவாதத்துக்கு எதிரான இன்றைய சர்வதேச எதிர்ப்பியக்கத்தில் அடக்குமுறை அரசுகளின் இராணுவப் பயங்கரவாதம் மூடிமறைக்கப்படுகின்றது.*

*''எனினும் அந்த அரச பயங்கரவாதத்தை எதிர்த்து நிற்பவர்கள் மீதே பயங்கரவாத முத்திரை குத்தப்படுகின்றது. இந்தத் துர்ப்பாக்கிய நிலை எமது விடுதலை இயக்கத்தின் மீதும் ஏற்பட்டிருக்கின்றது.''* - என்று பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார்.

தமிழர் தேசத்தின் சார்பில் எழுப்பப்பட்ட இந்த விசனக் குரலின் ஆழமான கருத்துகள் - அர்த்த பரிமாணங்கள் - சர்வதேச சமூகத்தின் நெஞ்சத்தை நெருடி, அதன் மூளையத்தைத் தட்டித் திறக்க வைத்திருக்கின்றன என்பது போல் தோன்றுகின்றது.

இவ்விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் திருப்புமுனைக் கருத்து உலக வல்லாதிக்க நாடான அமெரிக்காவில் இருந்து கிளம்பியிருப்பது ஆக்கபூர்வமான - ஆச்சரியமான - அம்சம். அதுவும் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு அதிக வாய்ப்புள்ளவர் எனக் கருதப்படும் ஹிலாரி கிளிண்டன் அம்மையாரின் உள்ளத்திலிருந்து அது ஊற்றெடுத்திருப்பது முக்கிய விடயமாகும்.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட்டரும், முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனின் துணைவியாருமான ஹிலாரி அம்மையார் அண்மையில் 'கார்டியன் செய்தி'க்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே இவ்விடயம் குறித்து பிரஸ்தாபித்திருக்கின்றார்.

*''எல்லாப் பயங்கரவாதிகளையும் - அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளாகவோ பாஸ்க் பிரிவினைவாதிகளாகவோ இருக்கலாம் - அவர்கள் பயன்படுத்தும் தந்திரோபாயங்கள் ஒன்றாக இருப்பதன் காரணமாக, ஒரே கூட்டமாகக் கருத முடியாது; அவர்கள் நடத்தும் போராட்டத்தின் இலக்குகள் வேறானவை.*

*''சரித்திர காலம் முழுவதுமே சில குறிப்பிடத்தக்க இலக்குகளை அடைவதற்காகப் பயங்கரவாதம் ஒரு கருவியாகப் பயன்பட்டே வந்திருக்கின்றது. சில சமயங்களில் கொள்கைக் கோட்பாடுகள் தொடர்பான இலக்குகளையும், ஏனையவை ஆள்புலப் பிரதேச இலக்குகளையும் அடையும் நோக்குடனும் பயன்படுத்தப்படுகின்றன.*

*''ஆகவே, அடிப்படையில் எல்லாப் பயங்கரவாதிகளையும் ஒரு கூட்டமாக நீங்கள் கருதமுடியாது. எனவே (அந்த அமைப்புகளின்) நோக்கம், பயங்கரவாதத்தை அவர்கள் நாடியதற்கான காரணங்கள், பின்னணி ஆகியவற்றைப் புரிந்து கொள்வது தொடர்பில் நாம் இன்னும் அதிகமாகப் பணியாற்ற வேண்டியுள்ளது.*

*''இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், ஸ்பெயினில் பாஸ்க் பிரிவினைவாதிகளும், அல் - அன்பர் மாகாண கிளர்ச்சியாளர்களும் அவர்களின் தந்திரோபாய உத்தியில் ஒன்றுபட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் ஏன் போராடுகின்றார்கள் என்பதை நாம் நோக்கவேண்டும் என்றே நான் கூறுகின்றேன்.*

*''தத்துவார்த்த அல்லது கொள்கைக் கோட்பாட்டில் ஒரே கருத்தை அவர்கள் அனைவரும் தமக்குள் பகிராமல் இருக்கலாம்.*

*''பயங்கரவாதத்தைக் கையாள்வோரை - அவர்கள் எதற்காக அதை நாடுகின்றார்கள் என்பதைக் கவனிக்காமல் விட்டு - அவர்களுக்கு எதிராக நாம் கிளர்ந்தெழும்போது, அனைவரையும் ஒரே தூரிகையால் நாம் கருத்து வண்ணம் தீட்டுகின்ற காரணத்தால் - அது சாத்தியமான புரிதலை நமக்குத் தராமல் போகவே - நாம் தவறிழைக்கின்றோம் என்றும் நான் கருதுகிறேன்.''* - என்று குறிப்பிட்டிருக்கின்றார் ஹிலாரி அம்மையார்.

தீனமாக ஒலிக்கும் தமிழரின் - தமிழர் தேசத்தின் - உரிமைக் குரலையும், அதன் பின்னணியில் புதைந்து கிடக்கும் நீதியுடன் கூடிய நியாயங்களையும், அர்த்தங்களையும் சுயாதீன நோக்கில் அணுகி, ஆராய்ந்து எடைபோடும் ஓர் உளப்பாங்கை நோக்கி சர்வதேசம் திரும்பத் தொடங்கியிருக்கின்றது என்பதையே ஹிலாரி அம்மையார் தெரிவித்துள்ள இக் கருத்துகள் கோடி காட்டுகின்றன.

தமிழர் தேசத்தின் உரிமைப் போராட்டத்தை அமெரிக்க வல்லாதிக்கம், தனது ஒரே அடிப்படையான நோக்குமூலம் 'பயங்கரவாதம்' ஆக வகுத்து, சித்திரித்து, அடையாளப்படுத்தியிருந்தாலும், ஹிலாரி அம்மையார் கூறியிருப்பதுபோன்ற நியாயத்தின் அடிப்படையில் அதை சீர்தூக்கிப் பார்க்க அந்நாடு முற்படுமாயின், தமிழரின் கிளர்வெழுச்சியை அது 'நியாயமான விடுதலைப் போராட்டமாக' அங்கீகரிக்கும் நிலைமை ஏற்படும் என்பதும் திண்ணம்.

அமெரிக்கா மட்டுமல்ல, 'உலகப் பயங்கரவாதம்' என்ற பொதுக் கோட்பாட்டை வரையறை செய்யும் முழு சர்வதேச சமூகமுமே ஹிலாரி அம்மையார் எழுப்பிய கேள்விகளை மனதில் கொள்ளுமாயின் அடக்கப்பட்ட - ஒடுக்கப்பட்ட - பல தேசியங்களுக்கு நியாயமும், நீதியான ஆதரவும் கிட்டும் என்பதும் நிச்சயம்.

# அநுராதபுரத்தில் களப்பலியான கரும்புலிகளை நினைவு கூர்ந்து நேற்று வன்னியில் நிகழ்வுகள்

## தனியிடத்தில் தலைவர் பிரபா அஞ்சலி


களப்பலியான கரும்புலிகளுக்கு தலைவர் பிரபா அஞ்சலி செலுத்துகிறார்.

கிளிநொச்சி, ஒக். 26

அநுராதபுரம் விமானத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட "எல்லாளன் நடவடிக்கை''யில் களப்பலியான 21 கரும்புலிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்று அக வணக்கம் செலுத்தினார்.

வன்னியில் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் இடத்தில் கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி, அக வணக்கம் செய்து மலர்மாலை அணிவித்து தலைவர் பிரபாகரன் அஞ்சலி செலுத்தினார்.

கரும்புலிகள் நினைவாக வன்னி எங்கும் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மஞ்சள், சிவப்புக் கொடிகள் எங்கும் கட்டப்பட்டிருந்தன.

கோட்டமட்டத்தில் விசேட அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன. மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர்அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் போராளிகளும் கலந்துகொண்டனர். (அ-1)

## தீவகத்திலிருந்து இறைச்சி எடுத்துவர தடை விதிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 26

தீவுப் பகுதியில் இருந்து கால்நடைகளும் இறைச்சியும் கடத்தப்பட்டு மாநகரசபைப் பிரிவில் விற்பனை செய்யப்படுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என மாநகரசபைப் பகுதியில் இறைச்சிக் கடை நடத்தும் வியாபாரிகள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக அரச அதிபருக்கு அவர்கள் கூட்டாக அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அரச அதிபருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தீவுப் பகுதியில் இருந்து ஆடு, மாடுகளைக் கொண்டுவருவது தடை செய்யப்பட்டுள்ள போதிலும் பலரும் ஆடு, மாடு இறைச்சிகளை எடுத்துவந்து யாழ். மாநகரசபைப் பிரிவில் விற்பனை செய்கிறார்கள்.

பல லட்சம் ரூபாவை செலுத்தி குத்தகை பெற்ற குருநகர், நாவாந்துறை, பாஷையூர், நரிக்குண்டு, புங்கங்குளம் ஆகிய இடங்களில் மாநகர சபையிடமிருந்து குத்தகைக்கு பெற்ற 11 கடைகளை எடுத்த நாம் பாதிக்கப்பட்டுள்ளோம்.

மாநகர சபைக்குரிய குத்தகைப் பணத்தைக் கூட செலுத்தமுடியாத நிலையில் நாங்கள் பாதிக்கப்பட்டுள்ளோம்.

எனவே தீவுப் பகுதி பிரதேச அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு முடிவுக்கு கொண்டுவரவேண்டும்.

இப்போதைய நிலை நீடித்தால் மாத இறுதியில் கடைகளைப் பூட்டவும் முடிவு செய்துள்ளோம்- என்று உள்ளது. (அ-1)

## வடமராட்சி வலயத்தின் உதைபந்தாட்டப் போட்டி மீண்டும் இன்று ஆரம்பம்

உடுப்பிட்டி, ஒக். 26

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று காலை 7.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகிறது.

தவிர்க்க முடியாத காரணத்தால் இடை நிறுத்தப்பட்டிருந்த இச்சுற்றுப் போட்டி மீண்டும் இன்று தொடக்கம் இடம்பெறும் என்று வடமராட்சி உடற் கல்விப் பணிப்பாளர் வி.வல்லிபுரம் தெரிவித்தார்.

அணி வீரர்கள், பொறுப்பாசிரியர்கள், மற்றும் பயிற்றுவிப்பாளர்களை மட்டுமே போட்டிக்கு சமுகமளிக் குமாறு அவர் கேட்டுள்ளார். (1-155)

# இழப்புகள், பின்வாங்கல்கள் புலிகளின் மனோபலத்தில் தளர்வை ஏற்படுத்தவில்லை

## அ'புரம் தாக்குதல் குறித்து இந்திய நிபுணர் இராமன்

**அநுராதபுரம் விமானத் தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் குறித்து இந்திய இராணுவத்தின் முன்னாள் ஆலோசகர் பி.இராமன் ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.**

**அவர் எழுதியுள்ள ஆய்வுக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

நம்பமுடியாத அளவிலான மிக உச்சக்கட்ட உறுதிப்பாடும், துணிவும், துல்லியமும் நிறைந்த வெற்றிகரமான தாக்குதலை, விடுதலைப் புலிகளின் 21 கரும்புலி உறுப்பினர்கள் நடத்தியிருக்கின்றனர்.


குறிப்பாக, இந்தத் துணிகரத் தாக்குதலுக்கு, ஒரு கிழக்கு மாகாணத்தவர் தலைமைதாங்கியிருப்பதும், விடுதலைப் புலிகளின் வான்படையின் இரு வானூர்திகள் வழங்கிய ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானவை.

மிக அதிகபட்ச புலனாய்வுத் தகவல்களுடன் மதிநுட்பம் நிறைந்த, உச்சக்கட்ட திட்டமிடல் மற்றும் பயிற்சிகளை உள்ளடக்கிய இத்தகையதொரு தாக்குதலை, உலகின் வேறு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் நடத்தியிருக்க முடியாது என்று மேற்குலக இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக விடுதலைப் புலிகள் பலவித தியாகங்கள் இழப்புக்களுடன் கூடிய வலிகளைத் தாங்கிக்கொண்டு, நீண்ட காலம் திட்டமிட்டிருக்கின்றனர் என்றேதான் கருதுவதாகத் தெரிவித்திருக்கிறார்.

கரும்புலிகள், சிறிய குழுக்களாகப் பிரிந்து, இரு வேறு திசைகளிலிருந்து, அநுராதபுர வான்படைத் தளத்திற்குள் ஊடுருவியிருக்கின்றனர். வெறும் 20 நிமிடத்துக்குள் பாதுகாப்புக் கடமையிலிருந்த படையினரைத் திகைக்க வைக்கும் வகையில் அதிரடித் தாக்குதல்களைத் தொடுத்து, ஆயுதங்களையும் தொடர்பாடல் உபகரணங்களையும் கைப்பற்றியதுடன், அங்கிருந்த வானூர்தி எதிர்ப்பு ஏவுகணையையும், வான் பரப்பைக் கண்காணிக்கும் ராடார் உபகரணத்தையும் செயலிழக்க வைத்துள்ளனர்.

இந்த முதற்கட்ட செயற்பாடுகளின் வெற்றியை, தமது கட்டளைத் தலைமையகத்திற்கு தகவலாகப் பரிமாறியதும், விடுதலைப் புலிகளின் வான்படை, தமது இரு வானூர்திகளை அனுப்பி, குண்டுத் தாக்குதலையும் நடத்திவிட்டு, வெற்றிகரமாக தளம் திரும்பியிருக்கின்றன.



சிறிலங்காவின் அநுராதபுரம் வான் படைத்தளத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறப்பு கொமாண்டோ அணி, அதி காலை 3 மணியிலிருந்து காலை 9 மணிவரை, தங்களது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்து படிப்படியாக மிகத் துல்லியமான திட்டமிடலில், அங்கிருந்த பல்வேறு வானூர்திகளை அழித்துள்ளனர்.

உலங்கு வானூர்தி -03, பயிற்சி வானூர்திகள் - 02, ஆளற்ற வேவு வானூர்திகள் - 03 போன்றவை இவற்றில் அடங்கும்.

இது தவிர, வவுனியா வான் படைத்தளத்திலிருந்து நிலைமையை அவதானிக்கச் சென்ற சிறிலங்கா வான் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியை, விடுதலைப் புலிகளின் சிறப்பு கொமாண்டோ படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர். வான்படை முகாமிலிருந்த ராடார் உபகரணங்களை, விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டில் இயங்க வைத்து, வான்பரப்பை தொடர்ந்து அவதானித்துக் கொண்டிருந்தார்கள் என்பதனையே இந்தத் தாக்குதல் சுட்டிக்காட்டுகிறது.

வான்படைத் தளத்தில் பாதுகாக்கப்பட்ட ஆயுதக் களஞ்சியத்தை முற்றாக தாக்கியழித்த விடுதலைப் புலிகளின் கொமாண்டோப் படையணி பின்னர் அங்கிருந்த வானூர்தி ஓடுபாதையையும் குண்டுவீசி பாதிப்படைய வைத்துள்ளனர்.

காலை 9 மணிவரை கரும்புலிகள் அநுராதபுரம் வான் படைத்தளத்திலிருந்து தங்களது கட்டுபாட்டு மையத்துடன் தொடர்பிலிருந்ததாக, நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

சரியாக 9 மணிக்கு அனைத்து கொமாண்டோ உறுப்பினர்களின் தொடர்புகளும், முற்றாக துண்டிக்கப்பட்டன. இதன்படி பார்க்கும்போது, கரும்புலிகள், 9 மணிக்கு தங்களைத் தாங்களாகவே முடித்துக் கொள்வதற்கு முடிவெடுத்திருப்பார்கள் என்று தோன்றுகிறதே தவிர சிறிலங்காப் படையினர் அவர்களைக் கொல்வதற்கு வாய்ப்புக் கொடுத்ததாகத் தெரியவில்லை.

தற்போது கிடைக்கின்ற தகவல்களை வைத்துப் பார்க்கும் போது கரும்புலிகள் முகாமிற்குள் நுழைந்து, முகாமைத் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர், தரைப் படைக்கு உதவி வழங்குகின்ற வகையில் விடுதலைப் புலிகளின் வான்படை எவ்வாறு செயற்படலாம் என்பதனைப் பரீட்சிக்கின்ற ஒரு களமாக, தரைப்படையின் நகர்வுகளில் வான்படை எத்தகைய உதவிகளை வழங்கலாம் என்பதை ஆராய்கின்ற களமாக, இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என்று யோசிக்கத் தோன்றுகிறது.

ஏனெனில், தரைப்படையினர் தங்களது பூரண கட்டுப்பாட்டுக்குள் வான்படை முகாமைக் *(08ஆம் பக்கம் பார்க்க)*

### நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 10 : | சனிக்கிழமை 27.10.2007 |
| திதி : பிரதமை | முற்பகல்: 08.47 |
| நட்சத்திரம் : | பரணி |
| | மாலை: 06.12 |
| சுபநேரம் | : 03.03 - 04.33 |
| ராகுகாலம் | : 09.03 - 10.33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளின் உடல்களை நிர்வாணப்படுத்தியதை கண்டித்து சென்னையில் 29 இல் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஒக். 26

சர்வதேச நெறிமுறைகளுக்கு மாறாக அரச படையினர் தமிழீழ விடுதலைப் புலிப்போராளிகளின் உடல்களை நிர்வாணப்படுத்தி பொதுமக்களின் பார்வைக்கு வைத்தமையைக் கண்டித்து சென்னையில் எதிர்வரும் 29ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி அறிவித்துள்ளார்.

''ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள், எல்லை மீறிக் கொண்டிருக்கின்றன. அநுராதபுரத்தில் விமானப் படைத் தளத்தில் நடந்த தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் உடல்கள் நிர்வாணமாக பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளமையும், அதனைப் படம் பிடித்து அனைத்துலக ஊடகங்கள் வெளியிட்டுள்ளமையும் நாகரிக சமுதாயத்துக்கு ஒவ்வாத காட்டுமிராண்டித்தனமாகும்.

''ஐ.நா.வின் அனைத்துலக ஜெனிவா உடன்பாடு, போர்க் கைதிகளைப் புதைப்பது - எரிப்பது தொடர்பாக வலியுறுத்தும் மனித உரிமைப் பிரிவுகளை ஸ்ரீலங்கா மண்ணில் போட்டுப் புதைத்துள்ளது -

''ஸ்ரீலங்கா அரசின் இத்தகைய நாகரிகமற்ற காட்டுமிராண்டித்தனமான செயலைக் கண்டித்து எதிர்வரும் 29ஆம் திகதி சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது - என்றார் கொளத்தூர் தா.செ. மணி. (சி)

## கிளாலி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும், இதில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவர் உயிரிழந்ததுடன், 2 உறுப்பினர்கள் காயமடைந்தனர் என்றும் படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

சம்பவத்தின் பின்னர் இந்தப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ரி - 56 ரகத் துப்பாக்கி, மகசின்கள் - 09, கைக் குண்டுகள் - 11, திசையறி கருவி - 01 போன்றனவும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் இருவரின் சடலங்களும் மீட்கப்பட்டன என்று இராணுவம் தெரிவித்தது.

## திஸ்ஸமகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்கு வழங்கியுள்ள செய்தியில் தெரிவித்திருப்பவை வருமாறு-

கடற்படையினர் பயணித்த பஸ் ஒன்றை இலக்குவைத்து நேற்று மாலை 4.30 மணியளவில் புலிகளின் கொமாண்டோ அணியினர் மிக அண்மையில் நெருங்கித் தாக்குதல் நடத்தினர்.

இதன்போது 6 கடற்படையினர் கொல்லப்பட்டனர் எனவும் 12 பேர் காயமடைந்தனர் எனவும், தமது தரப்பில் உயிர் இழப்புகள் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார். (சி)

## உயிர் அச்சுறுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர்கள், பெண்கள் ஆகியோரை தங்க வைக்க யாழ்.மேல் நீதிமன்றக் கட்டத்திலும் -

ஆண்களைத் தங்கவைக்க காரைநகர் இளைஞர் நிலையக் கட்டடத்திலும்புனர்வாழ்வு நிலையங்களை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையங்களில் பொலீஸாரும், சிறைச்சாலை அதிகாரிகளும் பராமரிப்பு, பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுவர் என்றும் -

புனர்வாழ்வு நிலையங்களுக்கு வெளியே படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## கொழும்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றும் வகுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குழுவில் பெண் தற்கொலைதாரிகள் இருவரும் அடங்கியுள்ளனர் எனவும் - அனைவரும் வத்தளை, கந்தானை மற்றும் ஜால-எல பிரதேசங்களிலுள்ள விடுதிகளில் மறைந்திருக்கின்றனர் எனத் தங்களுக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர்.

இவர்கள் அறுவரதும் ஊர், பெயர் மற்றும் புகைப்பட விவரங்கள் பாதுகாப்புத் துறையினருக்கு கிடைத்துள்ளன என்றும் கூறப்படுகிறது. (சி)

## இழப்புகள்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுவந்த பின்னர், வானூர்திகள் வந்து குண்டு போடுகின்ற தேவை அவசிய மானதாகத் தெரியவில்லை. எனவே, இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகவும் நோக்கப்படலாம்.

விடுதலைப் புலிகளின் இந்தத் தாக்குதல் உக்கிரத்தை, சிறிலங்கா அரசு எப்படியும் மூடி மறைத்துவிட முயற்சிக்கிறது என்பது தெரிகிறது. தங்களது இரண்டு ஹெலிகள் அழிக்கப்பட்டதாகவும், இன்னு மொன்று விபத்துக்குள்ளானதாகவும் சிறிலங்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும், லண்டனைத் தளமாகக் கொண்ட "டெய்லி ரெலிகிராப்" ஊடகத்தின் கொழும்பு செய்தியாளர், குட்டை உடைத்திருக்கிறார். அவரது தகவலின்படி, 14 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான முக்கிய கண்காணிப்பு வானூர்தியான பீச்கிறாப்ற் உட்பட, மொத் தம் 17 வானூர்திகள் அல்லது ஹெலிகள் அழிக்கப்பட்டுள்ளன என்று அவரது அதிகாரபூர்வ செய்தியில் விவரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

அநுராதபுர வான் படைத்தள முகாம், சிறி லங்கா அரசின் இராணு வச்செயற்பாடுகளுக்கு, ஒரு மிக முக்கியமான மைய முகாம்.

வான் படையின் பிரதான பயிற்சி முகாமாகவும், பிரதான புலனாய்வுத் தகவல் வழங்கல் முகாமாகவும் செயற்பட்ட இப்படை முகாமில், வானிலிருந்து படம் பிடிக்கப்பட்டு, அங்குள்ள நவீன ரக உபகரணங்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு, உயர்மட்டத் தலைமைகளுக்கு மிக அவசியமான அத்தனை அறிவார்த்தமான புலனாய்வுத் தகவல்களை யும் வழங்கும் தளமாகவும் இது இயங்கியது.

பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகளைச் சேர்ந்த உயர் மட்ட ஆலோசகர்களும் பயிற்சியாளர்களும், அநுராதபுரம் வான் படை முகாமுடன் தொடர்புகளைத் தொடர்ச்சியாகப் பேணி வருவதுடன், அவ்வப்போது நேரடியாக அங்கு வந்து போவதும் உண்டு.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது, சிறி லங்கா படைகள் குண்டு வீசுகின்ற பலத்தை, இந்தத் தாக்குதல் முறியடிக்காவிடினும், கடற்படை மற்றும் வான் படையின் கண்காணிப்பு, புலனாய்வு மற்றும் படையினரைக் காவிச்செல்லும் பணிகளை மிக மோசமாகத் தாக்கியிருக்கின்ற இந்தத் தாக்குதல், மிகப் பாரிய பொருளாதார நெருக்கடியையும் படைத் தரப்பிற்கு உருவாக் கியிருக்கிறது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை சிறிலங்கா அரசபடைகள் தாக்கியழித்ததற்கான பழிவாங்கும் நடவ டிக்கையாக அல்லது, வடக்கில் சிறிலங்கா வான் படையின் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கான பதில் நடவடிக்கையாக, அநுராதபுரம் வான் படைத் தளம் மீதான இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகள் முன்னெடுத்திருக்கலாம்.

கிழக்கு மாகாணத்தை இழந்தமை, எவ் விதத்திலும் அவர்களது பலத்தைக் குறைக்க வில்லை. சிறுபான்மைத் தமிழினத்திற்கான அரசியல் வெற்றியை அடைகின்ற அவர்களது இலட்சியப் பயணத்திற்கான மன உறுதிப்பாடு இரட்டிப்பாக உயர்ந்திருப்பதையே, இந்த வான்படைத் தளம் மீதான தாக்குதல் சுட்டி நிற்கிறது.

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
BIOLOGY - 2009
3.2
தாவரப்போசணை
ஆரம்பம் : 27.10.2007
நேரம் : சனி, ஞாயிறு
4:15 - 5:30 p.m
பொன்திவாகரன்
2007 மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன

## நிறைமாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை ஜெயபாலசிங்கம் (வயது - 61) ஆகியோரும் இதில் உயிரிழந்தனர்.

ஜெயபாலசிங்கத்தின் மனைவி திரவியம் (வயது - 44), பிரான்ஸிஸ் சுதர்சன் (வயது - 15), லோகநாதன் திருபாக்கியம் (வயது - 40), லோகநாதன் உமாதேவி (வயது - 13), சந்திரன் றெபேக்கா (வயது - 04), பா.சுப்பிரமணியம் (வயது - 58), சு.போல்ராஜ் (வயது - 29), சொ. நிரோசன் (வயது - 03) ஆகியோர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர் கள் மன்னார் பள்ளமடு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் சொ. நிரோசன் மற்றும் சந்திரன் றெபேக்கா ஆகியோரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## சண்டே லீடர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்லப்பட்ட வாமணன் நேற்று மதியம்வரை தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அழைத்துச்செல்லப்பட்ட அன்றையதினம்இரவு 8.30 மணியளவில் அவரது தாயார் மட்டுமே வீடு திரும்பினார்.

இந்த நிலையிலேயே கல்கிஸை பதில் நீதிவான் இல்லத்தில் நேற்று மதியம் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் ஆஜர்ப்படுத்தப்பட்ட வாமணனை பதில் நீதிவான் இன்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதற்கிடையே குறித்த செய்தியை எழுதக் கூறி உதவிபுரிந்தார் எனக் கூறப்படும் பெண் ஊடகவியலாளரும், குற்றவிவகாரச் செய்திகளைக் கையாள்பவருமான டில்றுக்ஷி யையும் பொலிஸார் விசாரணைக்காக நேற்றுக் காலை 4ஆம் மாடிக்கு அழைத்தனர். இவர் விசாரணையின் பின்னர் மதியம் வீடு திரும்பினார்.

அமைச்சர் மனோ விஜயரத்னவின் மனைவியின் கைத்தொலைபேசிக் கட்டணத்தை இரத்தினக்கல் ஆபரணக் கூட்டுத்தாபனமே செலுத்தியது என்பது பற்றிய செய்திக்கட்டுரையே கடந்த ஞாயிற்றுக்கிழமை 'சண்டே லீடர்' நாளேட்டில் வெளியானது.

குறித்த செய்தி பிரசுரிக்கப்படுவதைத் தவிர்க்க 5லட்சம் ரூபா வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் மனோவிடம் வாமணன் கோரினார் என அமைச்சர் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கிடையே இவ் விசாரணை விவகாரத்தை சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட சர்வதேச ஊடக நிறுவனங்கள் கடும் விசனத்துடன் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

IIS
புலமைப்பரிசில் திட்டம் 2008
நீங்கள் இன்னும் விண்ணப்பிக்கவில்லையா?
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
"உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி IIS"
விண்ணப்ப படிவங்களினை IIS அலுவலகங்களிலும், பூபாலசிங்கம், Srilanka, Ruban, நாயகபாலன் ஆகிய புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2007
சித்தியடைந்த மாணவர்களுக்கான
பரிசளிப்பு நிகழ்வு
எமது கல்விநிலையத்தில் கல்விகற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 27.10.2007சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இயக்குநர்.

## தமிழருக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆள் கடத்தல்களும்,காணாமல் போதல் களும் நூற்றுக்கணக்கில் நிகழ்த்தப்பட்டுள்ளன.

கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களுக்கும், எறிகணைத் தாக்குதல்களுக்கும் குழந்தைகள், சிறார்கள் உட்பட அப்பாவி பொதுமக்கள் பலர் பலியாகியுள்ளனர். அகதிகளாக படகுகளில் அயல்நாடான இந்தியாவுக்குத் தப்பியோட முயன்ற பல தமிழர்கள் நடுக்கடலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

உணர்வுகளை உறைய வைக்கும் கொடூரமான வன்முறைச் சம்பவங்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள், சிறார்கள் தொடர்பில் நிகழ்த்தப்பட்டுள்ளன.

பாரிய இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக சம்பூர் பிரதேசத்தில் இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு மீண்டும் தம் காணிகளில் குடியேற அனுமதி மறுக்கப்படுகின்றது.

சட்டத்தரணிகளிடம் கப்பம் கோரும் அளவுக்கு ஆயுதக் குழுக்களின் அட்டகாசம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொடர்கின்றது. ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகுந்து ஆள்களை கொலை செய்யவும், கடத்தவும் இக்குழுக்கள் அனுமதிக்கப்படுகின்றன. வடக்கு - கிழக்கு முழுவதிலும் தம் விருப்பம் போல் அவை செயற்படுகின்றன.

போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி தலைநகர் கொழும்பு உட்பட தென்னிலங்கையிலும் தொடர்ந்து நிகழ்த்தப்படும் இந்த அப்பட்டமான பாரிய மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் மீண்டும் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியும் எந்தப் பலனுமில்லை.

மறுப்புக்கள், மழுப்பல்கள் இல்லையேல் மௌனம் என்பதே அரசின் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது.

மனித உரிமை அமைப்புகள் கொடுக்கும் எதிர்ப்புக் குரல்களை அரசு தொடர்ந்தும் அலட்சியப்படுத்துகின்றது.

மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனங்கள் மற்றும் சமவாயங்கள் பலவற்றை ஏற்றுக்கொண்டிருக்கும் இலங்கை அரசு பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் ஒன்றை நடத்துவதாக உலகம் அறியக் கூவிக்கொண்டிருக்கையில், தமிழ் மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதம் தொடர்ந்து ஏவி விடப்பட்டிருக்கின்றது.

*வெளிநாட்டு நிதி உதவியிலேயே ஆயுதங்கள் வாங்கப்படுகின்றன*

வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவி,கடன் உதவி என்பனவற்றைப் பயன்படுத்தியே இலங்கை அரசு யுத்தத்தை தொடர்ந்து நடத்துகின்றது.

யுத்தம் தொடரும் வரையில், தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களும் தொடரும் என்பதே எமது அனுபவப் பாடம்.

யுத்தத்தைநிறுத்திபேச்சுகளைமீளஆரம்பிக்குமாறுவிடுக்கப்பட்ட வேண்டுகோள்களை இலங்கை அரசு தொடர்ந்து புறக்கணிக்கின்றது.

இந்த நிலைமைகளில் உள்நாட்டில் மிதித்து துவைக்கப்படும் எமது மக்களின் மனித உரிமைகள் பற்றிய பிரச்சினையை 'பூகோளக் கிராமமாக' மாறியுள்ள புதிய உலகின் முன் - சர்வதேச சமூகத்தின் முன் - கொண்டு செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி கிடையாது. வெளிநாடுகளின் எந்த நல் உபதேசமும் இலங்கை அரசிடம் எடுபடாது என்பதும் தெளிவானது.

உதவி கோரி வெளிநாடுகளிடம் 'பிச்சைப் பாத்திரம்' ஏந்தத் தயங்காத இலங்கை அரசு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வெளிநாடு ஒன்று ஏதாவது பேசினால் கூட நெஞ்சை நிமிர்த்தி பதிலளிப்பதை நாம் பார்த்திருக்கின்றோம்.

*பொருளாதாரத் தடைகளே அரசியல் தீர்வுக்குத் தள்ளும்*

அதனால்தான் 'காத்திரமான நடவடிக்கை' சர்வதேச சமூகத்திடமிருந்து மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தேவைப்படுகின்றது.

இலங்கைக்கு எதிராக விதிக்கப்படக்கூடிய பொருளாதாரத் தடைகளே இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் அணுகுமுறைக்குப் பதிலாக 'அரசியல் தீர்வு' அணுகுமுறைக்கு இலங்கை அரசை தள்ள முடியும்.

இந்த யதார்த்தத்தின் அடிப்படையில்தான் 'பொருளாதாரத் தடை' என்ற வேண்டுகோள் எழுந்திருக்கின்றது.

இலங்கைக்கு 'பொருளாதார உதவி' புரியும் ஐரோப்பிய நாடுகளிடம் விடுக்கப்பட்டிருக்கும் இந்த வேண்டுகோளில் உள்ள தார்மீக நியாயம் தெளிவானது.

ஆனால், இந்த வேண்டுகோளை 'இராஜ துரோகம்' என பிரதம நீதியரசர் யாழ்ப்பாணத்தில் வைத்து விமர்சித்திருக்கின்றமை ஆச்சரியம் அளிக்கின்றது.

தனது பேச்சில் ஜனாதிபதியின் உத்தேச அரசியல் தீர்வுத் திட்டம் பற்றியும் ஏற்கனவே இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக 1988 இல் புகுத்தப்பட்ட 13 ஆவது திருத்தம் பற்றியும் பிரதம நீதியரசர் பிரஸ்தாபித்திருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றியும் தமிழினத்தின் பிறப்புஉரிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அதன் தேசிய அபிலாசைகள் பற்றியும் அரசியல் மட்டத்திலேயே விவாதிக்கப்படவேண்டும். இது விடயம் பற்றி பிரதம நீதியரசரின் கருத்துகள் பற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை.

ஆனால் ஒன்று. எமது மக்களுக்கு தொடர்ந்து மறுக்கப்பட்டு வரும் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையைக் கோருவது 'ராஜ துரோகம்' என்றால் அதன் விளைவுகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தயக்கமின்றிச் சந்திக்கும்.

''செயல்களில் பலன்களில் பற்றில்லாது கடமையைச் செய்வாயாக' என்ற பகவத் கீதையின் மூன்றாம் அத்தியாயத்தின் பத்தொன்பதாவது சுலோகத்தை நாம் இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்வது பொருத்தமானது - என்று கூறினார். (அ-சி)

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
27.10.07 (Sat)
IT for Bankers [for ACBF Candidates]
Dip. in Office Management (Ms Office)
Dip. in Programming Languages

வாழ்த்துகின்றோம்

எமது ஈவிலின் இரத்தினம் நிறுவனத்தின் இயக்குநரின் துணைவியாரும், உடுவில் மகளிர் கல்லூரியின் சிரேஷ்ட பிரிவு மேற்பார்வையாளருமான
பற்றீசியா சுவிந்தா ஜெபரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் முதுதத்துவமாணி (M.Phil) பட்டம் பெற்றமையையிட்டு, அவரை நாம் மனதார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
ஈவிலின் இரத்தினம் நிறுவனத்தினர்.
(67332)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org